செ.வெ.எண்.303 நாள்.04.07.2017

**காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிறந்த கலைஞர்கள் 2015–16 மற்றும் 2016–17 ஆம் ஆண்டுக்கான மாவட்டக் கலை விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பா. பொன்னையா. இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு**

*************

தமிழ்நாட்டின் கலைப் பண்புகளை மேம்படுத்தவும், பாதுகாக்கும் நோக்கிலும், கலைஞர்களின் கலைத் திறனை சிறப்பிக்கும் வகையிலும் கலை பண்பாட்டுத் துறையின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் செயல்படும் மாவட்டக் கலை மன்றங்களின் வாயிலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் 2002–03 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வயது மற்றும் கலைப்புலமையின் அடிப்படையில், தேர்வுக்குழு மூலம் சிறந்த 5 கலைஞர்களைத் தேர்வுசெய்து மாவட்ட அளவில் கலை விருதுகள் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

அவ்வாணையின்படி 2015–16 மற்றும் 2016–17 ஆம் ஆண்டுகளுக்கான காஞ்சிபுரம் மாவட்டக் கலை விருதுகளை காஞ்சிபுரம் மாவட்டக் கலை மன்றத்தின் வாயிலாக, இயல், இசை, நாடகம், நாட்டுப்புறக்கலை, ஓவியம், சிற்பம் முதலிய கலைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கலைகளில் சிறந்து விளங்கும் தலா ஐந்து கலைஞர்களை தேர்வுசெய்து விருதுகள் வழங்கப்படவுள்ளன. ஆகவே காஞ்சிபுரம் மாவட்டத்தின் கலை விருதுகள் பெற குரலிசை, பரத நாட்டியம், நாதஸ்வரம், தவில், வயலின், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல் உள்ளிட்ட இசைக்கருவிகள் இசைக்கும் கலைஞர்கள், ஓவியம், சிற்பம், நாடகக்கலைஞர்கள் மற்றும் கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, கைச்சிலம்பம், தெருக்கூத்து உள்ளிட்ட நாட்டுப்புறக் கலைகளைத் தொழிலாகக் கொண்டு கலைத்துறையில் சிறந்து விளங்கிய, சிறந்து விளங்கும் காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த கலைஞர்கள் வயதுக்கேற்ப கீழ்வரும் பிரிவுகளில் விண்ணப்பிக்கலாம்.

**விருது விவரம்**

| வ.எண். | வயது | விருது |
|---|---|---|
| 1. | 18 வயதும் அதற்குட்பட்ட கலைஞர்களுக்கு | கலை இளமணி |
| 2. | 19 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட கலைஞர்களுக்கு | கலை வளர்மணி |
| 3. | 36 வயது முதல் 50 வயதிற்குட்பட்ட கலைஞர்களுக்கு | கலைச் சுடர்மணி |
| 4. | 51 வயது முதல் 60 வயதிற்குட்பட்ட கலைஞர்களுக்கு | கலை நன்மணி |
| 5. | 61 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு | கலை முதுமணி |

வயது மற்றும் கலைப்புலமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் பத்து சிறந்த கலைஞர்களுக்கு பொற்கிழி, பட்டயம் மற்றும் பொன்னாடையும் வழங்கப்படும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசிய விருதுகள், மாநில விருதுகள் (கலைமாமணி) மற்றும் ஏற்கனவே மாவட்டக் கலை மன்றத்தின் விருதுகளைப் பெற்ற கலைஞர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பம் செய்யக் கூடாது.

எனவே காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கலைஞர்கள் மேற்காண் கலை விருதுகள் பெறுவதற்கான விண்ணப்பத்துடன் பாஸ்போர்ட் அளவு புகைப்படம், வயதுச் சான்று, முகவரிச்சான்று (குடும்ப அட்டை நகல்), தொலைபேசி எண் மற்றும் கலை அனுபவச் சான்றுகளின் நகல்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு 21.07.2017க்குள் விண்ணப்பிக்குமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :** உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம்,
சதாவரம், காது கேளாதோர் பள்ளி அருகில்,
காஞ்சிபுரம்–631 502, (தொலைபேசி எண். 044 27290735)

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.